

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (2.4.2025) தலைமைச் செயலகத்தில், பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் 2025–2026 ஆம் ஆண்டிற்கான பால்வளத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் மருத்துவர் ந.சுப்பையன், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் / ஆவின் நிர்வாக இயக்குநர் ஆ.அண்ணாதுரை ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (2.4.2025) தலைமைச் செயலகத்தில், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன் 2025–2026 ஆம் ஆண்டிற்கான சர்க்கரைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (2.4.2025) தலைமைச் செயலகத்தில், மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் 2025–2026 ஆம் ஆண்டிற்கான கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் மருத்துவர் ந. சுப்பையன், கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் ஆர். கண்ணன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர் திருமதி ஆர். கஜலட்சுமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



சென்னை, தாட்கோ தலைமை அலுவலகத்தில், நேற்று முன்தினம் (2.4.2025) துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராக நா.இளையராஜா பொறுப்பேற்றுக் கொண்டார். உடன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர் த. வேலு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு. கந்தசாமி, ஆகியோர் உள்ளனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 04.04.2025 | சென்னை கிழக்கு | அம்பத்தூர் | யாதவாள் தெரு, பாடி, அம்பத்தூர் | இந்திரகுமார் தேரடி, அ.தஸ்னீம் பானு |
| 2 | 04.04.2025 | சென்னை கிழக்கு | திரு.வி.க நகர் | சந்திரயோகி சமாதி சாலை, மங்களபுரம் | மாண்புமிகு கோவி.செழியன், செ.ஜோதி காமாட்சிராஜன் |
| 3 | 04.04.2025 | தஞ்சாவூர் வடக்கு | திருவிடைமருதூர் | கதிராமங்கலம் கடைவீதி, திருவிடைமருதூர் | பேராசிரியர் சுப.வீரபாண்டியன், ரா.கருணாநிதி |
| 4 | 04.04.2025 | அணைக்கட்டு | வேலூர் | பேருந்து நிலையம், ஒடுகத்தூர் | திண்டுக்கல் ஐ.லியோனி, எம்.முகமது ஜபீர் |
| 5 | 05.04.2025 | தஞ்சாவூர் வடக்கு | கும்பகோணம் | சோழபுரம் கடைவீதி, கும்பகோணம் | நாஞ்சில் சம்பத், மு.காவியா |
| 6 | 05.04.2025 | கிருஷ்ணகிரி மேற்கு | வேப்பனஹள்ளி | சூளகிரி | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, சி.பவித்ரா |
| 7 | 05.04.2025 | திருவாரூர் | நன்னிலம் | கலைஞர் அரங்கம், மஞ்சக்குடி | கம்பம் செல்வேந்திரன், வீ.வேல்முருகன் |
| 8 | 05.04.2025 | திருச்சி வடக்கு | மண்ணச்சநல்லூர் | எதுமலை பிரிவு ரோடு | ராஜகம்பீரன் அப்பாஸ், ப.வெங்கடேஷ் |
| 9 | 05.04.2025 | திண்டுக்கல் கிழக்கு | திண்டுக்கல் | என்.ஜி.ஓ.காலனி, உழவர் சந்தை அருகில் | மதுரை எஸ்.பாலா, அ.சுஹாசினி |
| 10 | 06.04.2025 | கிருஷ்ணகிரி கிழக்கு | பர்கூர் | போச்சம்பள்ளி | நாஞ்சில் சம்பத், கு.முரளிகிருஷ்ணன் |
| 11 | 06.04.2025 | திண்டுக்கல் கிழக்கு | நிலக்கோட்டை | மதுரை ரோடு, வத்தலகுண்டு | ராஜகம்பீரன் அப்பாஸ், துரை தினகரன் |
| 12 | 06.04.2025 | திருச்சி வடக்கு | துறையூர் | வடக்குத் தெரு, நால் ரோடு, ந.குணசீலன் தெரு | முனைவர் இரா.தி.சபாபதி மோகன், அ.சார்மதி |

அன்பகம், சென்னை – 18.
நாள் : 02–04–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி